தினகரன்

ஜூன் 16, 2024 ஞாயிற்றுக்கிழமை

# விழிப்புணர்வு நடைபயணம்




உலக ரத்த கொடையாளர் தினத்தையொட்டி ஜிப்மர் மருத்துவமனையின் ரத்த பரிமாற்ற மருத்துவத்துறை சார்பில் ராஜீவ் காந்தி மருத்துவமனையில் இருந்து ரத்த விழிப்புணர்வு நடைபயணம் நடந்தது.

**புதுச்சேரி, ஜூன் 16:** ரத்த வகைகளை கண்டுபிடித்த கார்ல் லேன்ஸ்டைனர் பிறந்த நாளான நேற்று முன்தினம் (14ம் தேதி) உலக ரத்த கொடையாளர் தினமாக ஆண்டுதோறும் கொண்டாப்பட்டு வருகிறது. அதன்படி இந்தாண்டு புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையின் ரத்த பரிமாற்ற மருத்துவத் துறை புதுச்சேரி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள தன்னார்வ ரத்ததான முகாம்களை உள்ளடக்கிய ஒரு மாத கொண்டாட்டத்தை ஏற்பாடு செய்துள்ளது. அதன் ஒரு பகுதியாக நேற்று முன்தினம் காலை ரத்த தான விழிப்புணர்வு நடைபயணம் நடந்தது. எல்லப்பிள்ளைச்சாவடியில் உள்ள ராஜீவ்காந்தி பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனை அருகே தொடங்கிய நடைபயணம் ஜிப்மர் விளையாட்டு மைதானம் வரை நடந்தது. இதில் மருத்துவ மாணவ, மாணவிகள், தன்னார்வலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு கைகளில் விழிப்புணர்வு அட்டை ஏந்தி சென்றனர்.

இந்த நடைபயணத்தை ஜிப்மர் இயக்குனர் (பொறுப்பு) கவுதம் ராணு, மருத்துவ கண்காணிப்பாளர் துரைராஜன், புதுவை எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்க திட்ட இயக்குனர் சித்ராதேவி ஆகியோர் கொடியசைத்து தொடங்கி வைத்தனர்.